இனிமையான குழந்தைகளே! அமிர்த வேளையில் எழுந்து தியானத்தில் அமருங்கள், சிந்தனை செய்யுங்கள் - நான் ஆத்மா, நமது பாபா தோட்டக்காரனாக இருக்கிறார், அவர் படகோட்டியாக இருக்கிறார், நான் அவருடைய குழந்தையாக இருக்கின்றேன், தலைவனாகி ஞான ரத்தினங்களை சிந்தனை செய்யுங்கள்.

கேள்வி: எந்த ஒரு விசயத்தின் மகத்துவம் உலகத்திலும் இருக்கிறது, பாபாவிடமும் இருக்கிறது?

பதில்: தானத்தின் மகத்துவம். குழந்தைகளாகிய நீங்கள் இரக்க மனதுடையவராகி, அனைவர் மீதும் கருணை காட்ட வேண்டும். அனைவருக்கும் அழியாத ஞான ரத்தினங்களின் தானம் கொடுக்க வேண்டும். தானம் செய்பவர்களுக்கு நிறைய மகிமை ஏற்படுகிறது. செய்தித்தாள் களிலும் அவருடைய பெயர் வருகிறது. ஆக நீங்களும் அனைவருக்கும் தானம் செய்ய வேண்டும். அதாவது தியானம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பாடல்: எனக்கு உதவி அளிப்பவரே..........

ஓம் சாந்தி யார் மூழ்கி விடுகிறார்களோ, அவருக்குத் தான் உதவி செய்யப்படுகிறது, அவர்களைக் கரை சேர்க்க உதவி செய்கிறார்கள், ஏனெனில் படகோட்டி என்ற பெயரை பாரதவாசிகள் தெரிந்திருக்கின்றனர். பட கோட்டியின் வேலை மூழ்குபவரைக் காப்பாற்று வதாகும். பாரதவாசிகளின் படகு மூழ்கிப்போய் விட்டது என்று குழந்தைகளுக்குத் தெரியும். ஒவ்வொரு விசயமும் பாரதவாசிகளுக்காகத் தான் இருக்கிறது. மற்ற எந்த கண்டத்திற்காகவும் சொல்ல மாட்டர்கள். இதைக்கூட நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். சத்ய நாராயணனின் கதை அதாவது அமர்நாத்தின் கதை கூட இங்கே நடக்கிறது. நீங்கள் அதிகாலையில் தியானத்தில் அமரும் போது யாரை நினைக்கிறீர்கள்? பக்தி மார்க்கத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை நினைவு செய்கின்றனர். அவர்கள் அனைவருடைய சாதனையும் (செய்கையும்) யதார்த்த மற்றது. சாதனையைக் கற்றுக்கொடுக்கக்கூடிய படகோட்டி அல்லது தோட்டக்காரன் யாரும் கிடையாது. இப்படி-இப்படி செய்யுங்கள் என்று குருக்கள் கூட தியானம் கற்றுக் கொடுக் கிறார்கள். நினைவில் இருப்பதற்காக மிகுந்த முயற்சி செய்கின்றனர். யோகா சாதனை என்று சொல்லப்படுகிறது. அது மனிதர்கள் மனிதர்களுக்கு செய்விக்கின்றனர். இப்போது உங்களுக்குத் தெரியும், இந்த தோட்டத்துக்கு எஜமானன் அல்லது தலைவன் பரமபிதா பரமாத்மா ஆவார். முள்காட்டுக்குத் தலைவன் இராவணன் ஆவார். மாயை இராவணன் முள் நிறைந்த காட்டை உருவாக்குகின்றான். உங்களது இந்த விசயங்களைக் கூட ஒரு சிலரே அறிந்திருக்கின்றனர். மறந்து விடுகின்றனர். மாயை மறக்கச் செய்துவிடுகிறது. தியானத்தில் அமர்வதில் கூட மாயை பெரிய தடையைப் போடுகிறது. தியானம் எப்படிச் செய்வது - இதைக் கூட பாபா கற்றுக் கொடுக்கிறார். நீங்கள் கர்மயோகிகள். பகலில் கர்மம் செய்யத்தான் வேண்டும். அதற்காக எந்த பந்தனமும் கிடையாது. பகலில் ஒருபோதும் தியானம் நடைபெறுவதில்லை. பகலில் சாப்பிடு வது-குடிப்பது, விளையாடுவது-குதிப்பது, தொழில் செய்வது ஆகியன செய்ய வேண்டி இருக்கிறது. அதில் நினைவில் இருக்க முடிவதில்லை. நாங்கள் நாள் முழுவதும் நினைவில் இருக்கிறோம்

என்று நிறைய பேர் சொல்கிறார்கள், ஆனால் மிகக் கடினம் ஆகும். பாபா அனுபவத்தைச் சொல்கிறார். அமிர்த வேளையின் நேரம் சதோகுணியாக இருக்கிறது, அந்த நேரத்தில் நினைவு செய்வது எளிதாகும். அமிர்தவேளையின் நேரம் அனைத்தையும் விட சிறந்தது. பகலிலோ பேசிக் கொண்டு இருக்கிறார்கள். கர்மம் செய்யும்போது நினைவு யதார்த்த மாக இருக்கிறது என்றால் மிக நல்லது. ஆனால் பாபா தன்னுடைய அனுபவத்தைச் சொல் கிறார்- நான் பாபா நினைவில் இருந்து உங்களிடம் பேச முயற்சி செய்கின்றேன். உள்ளுக்குள் இந்த போதை இருக்கிறது - தந்தையாகிய நானே (பிரஜாபிதா பிரம்மா) குழந்தைகளிடம் பேசுகின்றேன். நானே மனிதப் படைப்பிற்கு தந்தையாக இருக்கின்றேன்-- இப்படிப் புரிந்து கொள்வதன் மூலம் போதை ஏறுகிறது. மற்றபடி நான் ஆத்மா, பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்தவாறு பேச வேண்டும் என்ற நினைவு இருப்பது மிகக் கடினம் ஆகும். பாபா தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறார் அல்லவா! பாபா கற்றுக்கொடுக்கவும் செய்கிறார்ர். இவர் தன்னை தோட்டக்காரர் என்று அறிந்திருக்கின்றார். தோட்டக்காரர் கண்டிப்பாக தோட்டத் தைத் தான் உருவாக்குவார். முட்களை உருவாக்க மட்டார். தோட்டக்காரன் முட்களின் விதையை ஊன்ற மாட்டார். தோட்டக்காரன் எப்போதும் பூக்களை வைப்பார். ஆக பாபா கூட பூக்களை வைக்கிறார். காட்டை உருவாக்குவது மாயை ஆகும். அதன் வழிப்படி நடப்பதன் மூலம் மனிதர்கள் முட்களாகி விடுகின்றனர். இந்த ஞானம் கிடைத் திருக்கிறது-- பாபா தோட்டக்காரர், படகோட்டி, இரக்க மனதுடையவர், விதை ரூபமானவரும் கூட. இரவில் அமரும் போது சிந்தனை ஓடுகிறது-- இது எவ்வளவு பெரிய தோட்டம்! முதலில் எவ்வளவு சிறியதாக இருந்தது! ஆக யோகத்தின் கூடவே ஞானமும் வேண்டும். மனிதர்களிடம் ஞானம் கொஞ்சமும் கிடையாது. அனேக விதமான யோகம் செய்கின்றனர். யார் யாருடைய நினைவிலேயோ அமருகின்றனர். ஞானத்தின் விசயமே இல்லை. காளியின் நினைவில் அமர்ந்தால், காளியின் உருவம் தான் முன்னால் வரும். ஜெகதம்பாவை நினைவு செய்து கொண்டே இருப்பார்கள். அது பக்தி மார்க்கமாகும். பாபாவின் நினைவோ ஆஸ்தி யின் நினைவோ இருப்பதில்லை. பக்தி பல வழிகளில் செய்கின்றனர். மாலையை உருட்டு கின்றனர். சிலர் குப்தமாக (மறை முகமாக) மாலையை உருட்டுகின்றனர். நம்முடையது கூட குப்த மாலையாகும். ஆக இதன் நினைவுச் சின்னமாக பக்தி மார்க்கத்தில் எவ்வளவு செய் கின்றனர். பாபாவுக்கு (பிரம்மா) சிறு வயது அனுபவம் இருக்கிறது. அப்பா எப்படி உருட்டு கிறாரோ, அதுபோல தாமும் அவரைப் பார்த்து ஒரு அறையில் அமர்ந்து மாலை உருட்டினார். இராம்-இராம் என்று சொன்னார். அவ்வளவு தான், ஞானம் கொஞ்சமும் கிடையாது. இப்போது குழந்தைகளாகிய உங்களிடமோ ஞானம் இருக்கிறது. அமிர்த வேளையில் இந்த தியானத்தில் அமரும் பழக்கம் வந்து விட்டால், மிகுந்த குஷி (மஜா) ஏற்படும். பாபா தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறார். ஞானத்தில் கூட மகிழ்ச்சியின் அனுபவம் செய்து கொண்டே இருக்கின்றனர். எத்தனை பெரிய தோட்டமாக இருக்கிறது. முதலில் சிறியதாக இருந்தது. விதை கூட நினைவுக்கு வந்தது, தோட்டமும் நினைவுக்கு வந்தது. எப்படி தோட்டம் உருவாகிறது-பாபாவிடம் இந்த ஞானம் உள்ளது, நம்மிடமும் இந்த ஞானம் உள்ளது. முழு மரமும் புத்தியில் வந்து விடுகிறது. உள்ளுக்குள் சிந்தனை ஓடிக் கொண்டே இருக்கிறது, இதை தியானம் என்று சொல்லப்படுகிறது. பாபாவின் குஷி மற்றும் ஞானத்தின் குஷியும் இருக்கிறது. இரண்டும் நினைவுக்கு (பாபா மற்றும் ஞானம்) வருகிறது. தத்துவ ஞானிகள்

இப்படிப்பட்ட தியானத்தில் அமர்வதில்லை. அவர்களுக்குத் தத்துவம் தான் நினைவில் வரும். தத்துவத்தில் மூழ்கிவிட வேண்டும் அவ்வளவு தான். படைப்பு மற்றும் படைப்பவரைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. ஆக அவர்களின் மற்றும் குழந்தை களாகிய உங்களின் விசயம் தனிப்பட்டது.

பாபா விதை ரூபமானவர்-நமக்கு இந்த ஞானம் இருக்கிறது. இரவில் (தியானத்தில்) அமர்வதன் மூலம் நல்ல நல்ல சிந்தனைகள் வரும். பக்தி மார்க்கத்தில் என்னென்ன செய் தனர் என்று புரிந்து கொள்ளமுடியும். ஹடயோகம் போன்று எவ்வளவு கற்றுக்கொடுக் கின்றனர். இப்போதோ புரிந்துவிட்டது, பாபாவை நினைவு செய்வதன் மூலம் அவருடைய முழு படைப்பும் (மரம்) நினைவுக்கு வந்துவிடுகிறது. நாம் 84 பிறவிகள் சுற்றி வந்திருக்கிறோம். இப்போது நாம் திரும்பிச் செல்கிறோம். இந்த நாடகச் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஞானச் செல்வத் தையும் நினைவு செய்கிறோம், செல்வத்தைக் கொடுப்பவரையும் நினைவு செய்கிறோம். எந்தளவு நினைவில் இருப்போமோ, அந்தளவு நிலை பரிபக்குவம் ஆகிக்கொண்டே செல்லும். நீங்கள் யாருக்கும் புரிய வைக்க முடியும்- தியானத்தில் நாங்கள் எப்படி அமர்கிறோம் என்று. மனிதர்களுக்குப் பலவிதமான வழி கிடைக்கிறது - இன்னாரை நினைவு செய்யுங்கள். இங்கே நாம் அனைவரும் ஒரு வழியில் இருக்கிறோம், ஒருவரின் நினைவிலேயே இருந்து கொண்டி ருக்கிறோம். சிறியவர், பெரியவர், முதியவர்-அனைவருக்கும் ஒரே வழி தான் கிடைக்கிறது. தியானத்தில் அமர வேண்டும் அல்லவா! நாம் ஆத்மாக்கள் தான் பரமாத்மா என்று ஆக முடியாது. ஆத்மா சொல்கிறது-நாம் 84 பிறவிகள் முடித்து விட்டோம், இப்போது திரும்பிச் செல்ல வேண்டும். பரமாத்மா இப்படிச் சொல்வாரா என்ன? அவரோ மறுபிறவியில் வருவ தில்லை. உங்களிடம் யாராவது வந்தால் அவரை ஹாலுக்கு அழைத்து வாருங்கள். நல்ல நல்ல மனிதர்கள் வருகிறார்கள், பாருங்கள், புரிந்து கொள்ள விருப்பம் இருந்தால் இங்கே கூட்டி வாருங்கள். நாம் எப்படி தியானம் செய்கிறோம் என்று அவர்களுக்குப் புரிய வையுங்கள். இரவிலும் தியானம் செய் கிறோம், பகலிலும் தியானம் செய்கிறோம். நாம் ஒரு பாபாவை நினைவு செய்கிறோம். பாபாவின் கட்டளை - என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் படைப் பின் சக்கரத்தை நினைவு செய்யுங்கள். 84 பிறவிகளும் பாடப்படுகிறது. கண்டிப்பாக தேவி-தேவதைகள் இருந்திருக்கின்றனர். அவர்களுடைய 84 பிறவிகள் தான் பாடப்படுகிறது. இந்த சக்கரத்தின் ரகசியத்தை நல்ல முறையில் புரிய வைக்க வேண்டும். நமக்கு பாபா மற்றும் அவருடைய படைப்பின் இந்த சக்கரம் நினைவில் இருக்கிறது. பாபாவின் நினைவு மற்றும் படைப்பின் முதல் இடை கடைசியின் ஞானம் புத்தியில் இருக்கிறது. நாம் அனைவருக்கும் ஒரே வழி தான். நாம் ஸ்ரீமத்படி இருக்கிறோம். அந்த பதீத பாவன் பாபா தான் வந்து எல்லைக்கப்பாற்பட்ட சொர்க்கத்தின் ஆஸ்தியைக் கொடுக்கிறார். ஆக கண்டிப்பாக பாபாவை நினைவு செய்ய வேண்டும் அல்லவா! பாபா மூலமாகத் தான் நாம் ஆஸ்தி அடைகிறோம். பிறகு விழுகிறோம், கடைசியில் தூய்மை இழந்து விடுகிறோம். படைப்பவராகிய தந்தை படைப்பின் ஞானத்தைத் தான் கொடுப்பார். இறைதந்தை ஞானம் நிறைந்தவர் ஆவார், பதீத பாவன் ஆவார். ஆக கண்டிப்பாக தூய்மை இல்லாத உலகத்தில் வந்து தூய்மையாக்குவார் அல்லவா! இப்படி நீங்கள் யாருக்காவது அமர்ந்து கற்றுக் கொடுத்தால் அவர்களுக்கு தாக்கம் ஏற்படும். வெறும் நல்லது-நல்லது என்று சொல்லிச் சென்று விடாதீர்கள், இதை

நடைமுறை யில் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுங்கள். பிறவி-பிறவிகளான சுமை தலை மீது உள்ளது. இதில் சிறிது காலம் தேவைப்படுகிறது.

நீங்கள் புரிய வைக்க வேண்டும்-பாபா வந்திருக்கிறார், மரணம் கண்முன்னே உள்ளது, தவறு செய்தால் ஆஸ்தி அடைய முடியாது. சுப காரியத்தில் தாமதம் செய்யக் கூடாது. இப்போது கற்றுக்கொண்டு செல்லுங்கள். இந்த தியானத்தில் அமர்வதன் மூலம் உங்களுக்கு மகிழ்ச்சி (போதை) நன்றாகக் கூடும். இப்போது பாபாவை நினைவு செய்யுங்கள். உங்களின் தந்தை அல்லவா! பக்தி மார்க்கத்தில் பல பிறவிகளாக நினைவு செய்து கொண்டே வந்தீர்கள். லௌகீகத் தந்தையோ ஒவ்வொரு பிறவியிலும் மாறுகிறார். ஆனாலும் நீங்கள் நிராகாரத் தந்தையை கண்டிப்பாக நினைவு செய்கிறீர்கள். ஏனெனில் அவர் அழிவற்ற தந்தை ஆவார். அழியக்கூடிய தந்தையிடமிருந்து அழியக்கூடிய ஆஸ்தி கிடைக்கிறது. அழிவற்ற தந்தையிட மிருந்து அழிவற்ற ஆஸ்தி கிடைக்கிறது. நாம் ஒரு ஸ்ரீ ஸ்ரீ-யின் ஸ்ரீமத்படி நடந்து சிரேஷ்ட மாகிறோம். தேவி-தேவிதா தர்மம் தான் ஆதியில் வந்த சனாதன தர்மமாகும். அதிலிருந்து பிறகு மற்ற தர்மங்கள் (கிளைகள்) வருகிறது. சன்னியாசிகளினுடையது ரஜோபிரதான சன்னியாசமாகும். இது சதோபிரதான சன்னியாசமாகும். இது இராஜயோக மாகும்.

பாரதத்தின் முக்கியமான சாஸ்திரம் கீதையாகும். தியானத்திற்காக இதை புரிய வையுங்கள் - பாபா நமக்கு இப்படிப்பட்ட தியானத்தை கற்றுக் கொடுக்கிறார். பகவான் என்று மனிதரை சொல்ல முடியாது. பகவான் அனைவருக்கும் ஒருவராகத் தான் இருக்க வேண்டும் அல்லவா. அவர் தான் தூய்மையற்றவர்களை தூய்மை யாக்குபவராக இருக்கிறார், அவர் தான் சொர்க்கத்தை ஸ்தாபிக்கும் இறை தந்தையாக இருக்கிறார். மேலும் பாரதத்தில் தான் வருகிறார். அவருக்கு பக்தி மார்க்கத்தில் எவ்வளவு பெரிய கோவில் உருவாக்கு கிறார்கள். அந்த ஸ்ரீ ஸ்ரீ-யின் வழிப்படி தான் நாம் சிரேஷ்டமாகிறோம். இந்த விஷயங்களை அமர்ந்து புரிய வையுங்கள். பாபா மற்றும் படைப்பினுடைய முதல்-இடை-கடைசியை தெரிந்து கொள்ளுங்கள். இது வேறு யாருக்கும் தெரிவதில்லை. சத்யுகத்தின் ஆயுளையே அதிகமாக சொல்லி விட்டார்கள். முதலில் மரம் புதியதாக இருக்கிறது, அப்போது அதை சொர்க்கம் என்று சொல்கிறோம். பிறகு அது இற்றுப் போய்விடுகிறது. இப்போது இந்த முழு உலகமும் நரகமாகும். வீடு-வீடாக என்ன, முழு உலகமுமே நரகம் தான். இது முள் நிறைந்த காடாகும். ஒருவரை ஒருவர் முள்ளால் குத்திக் கொண்டே இருக்கின்றனர். பாபா வந்து பிறகு அல்லாவின் தோட்டத்தை உருவாக்குகிறார். பாபா வந்து சொர்க்கத்தை ஸ்தாபிக்கிறார். மலர்களின் தோட்டம் எது மற்றும் முள் நிறைந்த காடு என்று எதை சொல்லப்படுகிறது, என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் தெய்வீக மலராக ஆகின்றீர்கள். ஆகையால் சிந்தனை ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். பாபாவிடம் கூட இந்த ஞானம் இருக்கிறது. குழந்தை களிடமும் இந்த ஞானம் இருக்கிறது. இப்படி சிந்தனை செய்வதின் மூலம் இரவில் மிகுந்த போதை ஏற்படும், இப்படி எல்லாம் புரிய வைக்க வேண்டும். அப்பாவிகளுக்கு ஒன்றும் தெரிவதில்லை, ஆகையால் எனக்கு (பாபா) இரக்கம் ஏற்படுகிறது. ஓ, இறை தந்தையே! என்று சொல்கிறார்கள். ஆனால் பாபா மற்றும் அவருடைய படைப்பை தெரிந்து கொள்ளவில்லை. நாம்

கூட இப்போது அல்லாவின் குழந்தைகளாக ஆகியிருக் கிறோம். புரிய வைப்பதற்கு கூட மிகுந்த போதை வேண்டும். அழியாத ஞான ரத்தினம் இருக்கிறது என்றால், அதை தானம் செய்ய வேண்டும். தானம் செய்பவருக்கு மிக அதிக மகிமை ஏற்படுகிறது. செய்தித்தாள்களில் கூட வருகிறது. தர்ம சிந்தனையுடையவர்கள் தான் தானம் செய்கிறார்கள். நீங்களோ தர்ம சிந்தனையுடையவர் களாகத் தான் இருக்கின்றீர்கள். தானமே செய்யவில்லை என்றால் என்ன கிடைக்கும்? கண்டிப்பாக தானம் செய்ய வேண்டும். ஞானத்தை தானம் செய்வது மிக சகஜமானதாகும். பாபா சொல்கிறார்- நாங்கள் இப்படிப்பட்ட தியானத்தில் அமருகிறோம், இந்த உலக சக்கரம் இப்படியாக சுற்றுகிறது. முதலில் ஒரு தர்மம் இருந்தது பிறகு இந்த இந்த தர்மம் வந்தது. இவையனைத்தும் கிளை தர்மங்களாகும். இந்த விஷயங்கள் குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் அமர வேண்டும். மனிதர்களுக்கு யோகத்தின் மீது மிகுந்த ஆர்வம் இருக்கிறது. எங்கள் தியானத்தை செய்து பாருங்கள் என்று சொல்லுங்கள். யார் தர்ம சிந்தனை உடையவர் களோ, அவர்கள் தியான அறையை பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். தர்ம சிந்தனை உடைய மனிதர்கள் ஒருபோதும் பாவம் செய்வதில்லை. உங்களிடம் புரிய வைப்பதற்கான கருத்துகள் நிறைய இருக்கின்றன. ஆனால் குழந்தைகள் வரிசைக்கிரமமாக இருக்கின்றனர். சிலருடைய புத்தியின் பூட்டு திறப்பதே இல்லை. பாபாவை நினைவு செய்யவே இல்லை என்றால், பூட்டு எப்படி திறக்கும்? இது மிகவும் சகஜமாகும். நாம் எப்படி நினைவில் அமருகிறோம், என்று புரிய வைக்க வேண்டும். நாம் யாரை நினைவு செய்கிறோம், என்று மனிதர்களுக்கு தெரிவதே இல்லை. நமக்கு சொல்லிக் கொடுப்பவர், சுயம் நிராகார பரமபிதா பரமாத்மா ஆவார். அவர் தான் அனைவருக்கும் தந்தையாவார். அவர் பதீத பாவன் இறை தந்தை நமக்கு இராஜ யோகம் கற்றுத் தருகிறார். இப்போது நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள், கற்றுக் கொள்ளாமல் இருங்கள். நம் அனைவருக்கும் ஒரேயொரு வழிதான். ஸ்ரீ ஸ்ரீ -யிடமிருந்து நாம் வழி பெற்றுக் கொண்டிருக்கிறோம். இது தான் குறிக்கோள் ஆகும். பாபா எப்படியோ, அப்படியே குழந்தைகளும் ஞானம் நிறைந்தவர்கள் ஆவர். மனிதனிலிருந்து தேவதையாக ஒரு பாபா தான் ஆக்குகின்றார். இப்படி சிந்தனை செய்வதின் மூலம் இரவில் மிகுந்த போதை ஏற்படும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும்-தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) அமிர்த வேளையில் எழுந்து நினைவில் அமர்ந்து, ஞானத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். ஞான செல்வத்தையும் நினைவு செய்ய வேண்டும் அதே நேரத்தில் ஞானத்தை வழங்கும் வள்ளலையும் நினைவு செய்ய வேண்டும்.

(2) ஈஸ்வரிய போதையில் இருந்து கொண்டு சேவை செய்ய வேண்டும். அனைவருக்கும் தியானம் செய்வதற்கான சகஜமான விதியை புரிய வைக்க வேண்டும். ஒரே வழிப்படி நடப்பவர்களாகி இருக்க வேண்டும்.

வரதானம்: ஆன்மிக மகிழ்ச்சியின் அதிர்வலைகள் மூலம் அனைவருக்கும் சாந்தி

: மற்றும் சக்தியின் அனுபவம் செய்விக்கக் கூடிய சர்வ பிராப்தி சொரூபம் ஆகுக.

பரமாத்ம பிராப்தியால் நிரம்பப் பெற்ற சர்வ பிராப்தி சொரூப குழந்தைகள், தங்கள் முகத்தின் மூலம் ஆன்மிக மகிழ்ச்சியின் அதிர்வலைகளை மற்ற ஆத்மாக்கள் வரை கொண்டு சேர்க்கிறார் கள் மற்றும் அவர்களும் சாந்தி மற்றும் சக்தியின் அனுபவம் செய்கிறார்கள். எப்படி பழம் தரும் மரங்கள் தங்கள் குளிர்ச்சியின் நிழலில் மனிதர்களுக்குக் குளிர்ச்சியின் அனுபவம் செய்விக் கின்றனவோ மற்றும் மனிதர்கள் மகிழ்ச்சி அடைகிறார்களோ, அது போல் உங்கள் மகிழ்ச்சியின் அதிர்வலைகள் தங்கள் பிராப்தியின் நிழல் மூலம் உடல்- மனத்தின் சாந்தி மற்றும் சக்தியின் அனுபவம் செய்விக்கும்.

சுலோகன்: யார் ஸ்மிருதி சொரூபமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு எந்த ஒரு பரிஸ்திதியும் விளையாட்டாக அனுபவம் ஆகும்.